செண்பகத் தோப்பு அணைக் கட்டும் திட்டம்.

495—

* வினா எண். 21646 —திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா : —

(அ) வடாற்காடு மாவட்டத்தில் செண்பகத் தோப்பு அணை திட்டப் பணிகள் எந்த அளவில் உள்ளன ?

(ஆ) இதற்கென ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) மற்றும் (ஆ) வட ஆற்காடு மாவட்டம், போளூர் வட்டம் செண்பகத்தோப்பு கிராமத்தினருகே ரூபாய் 470 இலட்சம் செலவில் ஒரு நீர்த் தேக்கம் அமைப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான ஆக்கபூர்வமான ஆய்வுகள் எல்லாம் செய்யப்பட்டு அரசின் பரிசீலனையில் இருப்பதாக நாங்கள் அறிகிறோம். அதற்கு அரசு எப்போது அங்கீகாரம் வழங்கும்? ஏனென்றால், அது நீண்ட நாட்களாக இருக்கக்கூடிய பிரச்சினை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்ந்து, அதற்கான விரைவான நடவடிக்கையை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே செண்பகத் தோப்புத் திட்டத்தைப் போறுத்த மட்டிலும், அது நீண்ட காலமாக ஆய்வில் இருக்கின்ற திட்டம் என்பதை நானும் ஏற்றுக் கொள்கிறேன். அந்தப் பணியை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என்ற ஆசைதான் அரசுக்கும் இருக்கிறது, அதன் காரணமாக இதைக் கொள்கை அளவிலே, 1975 ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டாலும், இப்போது அரசு அதை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை .எடுத்து வருகிறது. எனவே, விரைவான ஆய்வு செய்யக்கூடிய கட்டாய சூழ்நிலைகள் இந்தத் திட்டத்தின் வாயிலாக உருவாகியிருக்கிறது. காரணம் பாலாற்றுப் படுகையில் அமைந்திருக்கிறது இந்தத் திட்டம்.. பாலாற்றுப் படுகையில் தேவையான தண்ணீர் இருக்கிறதா இல்லையா எனப்தை ஆய்வு செய்துதான் நடவடிக்கை எடுக்க முடியும் என்று சொன்னார்கள். 3 ஆண்டுக் காலம் ஆய்வு நடத்தப்பட்டது. அதற்குப் பிறகு உரிய தண்ணீர் இருப்பதாக ஆய்வின் அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இருந்தாலும், ஏறக்குறைய 307.54 ஏக்கர் நிலங்கள் வனத்துறையிடமிருந்து கையகப்படுத்தவேண்டிய

சூழ்நிலை இருக்கிறது. இதற்காக மத்திய அரசு அனுமதி வழங்கக் கூடிய நிலையில் இருக்கின்ற காரணத்தால், மத்திய அரசின் அனுமதியை எதிர்நோக்கி கோரிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

496 —

அம்பத்தூர் தொழிற்பேட்டையிலுள்ள மனைகள்.

*வினா எண் 19011—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தொழில் துவங்கும் இடங்களின் விலையை அரசு அதிக அளவில் உயர்த்தி விட்டதாகப் புகார் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) அரசு அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) ஆம்.

(ஆ) அம்பத்தூர் தொழிற்பேட்டையில் மேம்படுத்தப் பட்ட மனைகளின் விலையை ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3.00 இலட்சமாக அரசு உயர்த்தியது. இதனை ரூ. 30,000 என்று குறைக்கும்படி அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கமும், ரூ. 50,000 என்று குறைக்கும்படி தமிழ்நாடு சிறுதொழில்கள் சங்கமும் அரசை கேட்டுக் கொண்டன.

(இ) அம்பத்தூர் தொழிற்பேட்டையில் 19.274 ஏக்கர் நிலம் மட்டுமே ஏக்கருக்கு ரூ. 3.00 இலட்சம் என்ற விலையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத் தொழிற்பேட்டையில் தற்போது சுமார் 10.05 ஏக்கர் நிலம் மட்டுமே காலியாக உள்ளது. அம்பத்தூர் தொழிற்பேட்டையைக் காட்டிலும் சென்னை நகருக்கு அருகில் உள்ள வில்லிவாக்கம் அரும்பாக்கம் தொழிற்பேட்டைகளில் உள்ள நிலங்களின் விலையை அனுசரித்தே அம்பத்தூர் தொழிற்பேட்டையில் நிலத்தின் விலை நிர்ணயிக்கப் பட்டது. இந்த விலை நியாயமானதே என்று அரசு கருதியதால் அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு சிறு தொழில்கள் சங்கம் ஆகியவற்றின் கோரிக்கை மீது அரசு மேல் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை.